

# தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

## திண்டுக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ம.கணேசன் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு திண்டுக்கல் கிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பகுதி–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 06.08.2025 | பழனி நகரம் | மதீனா நகர், பழனி. | குமரி பிரபாகரன் சி.ஷாலினி |
| 2 | | | இந்திரா நகர், பழனி. | குமரி பிரபாகரன் சி.ஷாலினி |
| 3 | 7.8.2025 | திண்டுக்கல் பகுதி–1 | 1–வது வார்டு, கருணாநிதி நகர். | குமரி பிரபாகரன் ஜோ.கேத்ரின் மெர்லினா |
| 4 | | திண்டுக்கல் பகுதி–2 | கோபால் நகர், திண்டுக்கல். | குமரி பிரபாகரன் ஜோ.கேத்ரின் மெர்லினா |
| 5 | 8.8.2025 | ஆத்தூர் கிழக்கு ஒன்றியம் | செட்டியப்பட்டி | தூத்துக்குடி சரத்பாலா அ.சுஹாசினி |
| 6 | | சின்னாளப்பட்டி பேரூர் | பூஞ்சோலை | தூத்துக்குடி சரத்பாலா அ.சுஹாசினி |
| 7 | | ஆத்தூர் தெற்கு ஒன்றியம் | சீவல்சரகு | கந்திலி கரிகாலன் வா.ராஜேஸ்வரி |
| 8 | | ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றியம் | அனுமந்தராயன் கோட்டை | கந்திலி கரிகாலன் வா.ராஜேஸ்வரி |
| 9 | | ரெட்டியார்சத்திரம் மேற்கு ஒன்றியம் | ராமலிங்கப்பட்டி | சாவல்பூண்டி சுந்தரேசன் ம.சையது முஷாரப் |
| 10 | | கன்னிவாடி | கலையரங்கம் அருகில் | சாவல்பூண்டி சுந்தரேசன் ம.சையது முஷாரப் |
| 11 | | திண்டுக்கல் தெற்கு ஒன்றியம் | ரெட்டியப்பட்டி, தோட்டனூத்து. | கரூர் முரளி அ.செல்வக்குமார் |
| 12 | | திண்டுக்கல் கிழக்கு ஒன்றியம் | சீலப்பாடி பிரிவு | கரூர் முரளி அ.செல்வக்குமார் |
| 13 | 9.8.2025 | பழனி கிழக்கு ஒன்றியம் | மருத்துவநகர் | தூத்துக்குடி சரத்பாலா சி.மில்லர் மண்டேலா |
| 14 | | ஆயக்குடி பேரூர் | அரிசி ஆலை திடல் | தூத்துக்குடி சரத்பாலா சி.மில்லர் மண்டேலா |
| 15 | | பழனி வடக்கு ஒன்றியம் | சின்னக்கலையம்புத்தூர் | கந்திலி கரிகாலன் சி.ஷாலினி |
| 16 | | நெய்க்காரப்பட்டி பேரூர் | 7–வது வார்டு, முகமதியார் தெரு. | கந்திலி கரிகாலன் சி.ஷாலினி |
| 17 | | பழனி மேற்கு ஒன்றியம் | அ.கலையம்புத்தூர் | கரூர் முரளி வா.ராஜேஸ்வரி |
| 18 | | பாலசமுத்திரம் பேரூர் | பார்க் திடல் | கரூர் முரளி வா.ராஜேஸ்வரி |
| 19 | | நிலக்கோட்டை மேற்கு ஒன்றியம் | மைக்கேல்பாளையம் | வெள்ளைச்சாமி ஜோ.கேத்ரின் மெர்லினா |
| 20 | | அம்மைநாயக்கனூர் பேரூர் | கலைஞர் திடல் | வெள்ளைச்சாமி ஜோ.கேத்ரின் மெர்லினா |
| 21 | | நிலக்கோட்டை தெற்கு ஒன்றியம் | எத்திலோடு | பழனி குமணன் அ.சுஹாசினி |
| 22 | | நிலக்கோட்டை பேரூர் | புதுத்தெரு | பழனி குமணன் அ.சுஹாசினி |
| 23 | | வத்தலக்குண்டு வடக்கு ஒன்றியம் | தும்பலப்பட்டி | சாவல்பூண்டி சுந்தரேசன் அ.செல்வக்குமார் |
| 24 | | வத்தலக்குண்டு பேரூர் | காளியம்மன் கோயில் அருகில் | சாவல்பூண்டி சுந்தரேசன் அ.செல்வக்குமார் |
| 25 | | சேவுகம்பட்டி பேரூர் | உசிலம்பட்டி சாலைப் பிரிவு | சாவல்பூண்டி சுந்தரேசன் அ.செல்வக்குமார் |

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 26 | 9.8.2025 | வத்தலக்குண்டு கிழக்கு ஒன்றியம் | ஊராட்சி மன்றம் அருகில், விராலிப்பட்டி. | போடி காமராஜ் ம.சையது முஷாரப் |
| 27 | | பட்டிவீரன்பட்டி பேரூர் | அண்ணா மன்றம் அருகில் | போடி காமராஜ் ம.சையது முஷாரப் |
| 28 | | திண்டுக்கல் பகுதி–5 | மேட்டுப்பட்டி | சேலம் சுஜாதா ரா.ப்ரீத்தி |
| 29 | | திண்டுக்கல் பகுதி–6 | தங்கம் லாட்ஜ் அருகில், திண்டுக்கல். | சேலம் சுஜாதா ரா.ப்ரீத்தி |
| 30 | 10.8.2025 | திண்டுக்கல் பகுதி–3 | 21–வது வார்டு, சௌராஸ்டிராபுரம். | நாமக்கல் கண்ணன் அ.தீன்ஷா நூஃப் |
| 31 | | திண்டுக்கல் பகுதி–4 | சந்தை சாலை, நாகல் நகர். | நாமக்கல் கண்ணன் அ.தீன்ஷா நூஃப் |
| 32 | | கொடைக்கானல் மேல்மலை ஒன்றியம் | கவுஞ்சி மன்னவனூர் ஊராட்சி | தூத்துக்குடி சரத்பாலா ம.சையது முஷாரப் |
| 33 | | கொடைக்கானல் மத்திய ஒன்றியம் | வில்பட்டி | தூத்துக்குடி சரத்பாலா ம.சையது முஷாரப் |
| 34 | | கொடைக்கானல் கீழ்மலை வடக்கு ஒன்றியம் | வடகவுஞ்சி | கந்திலி கரிகாலன் சி.மில்லர் மண்டேலா |
| 35 | | கொடைக்கானல் கீழ்மலை தெற்கு ஒன்றியம் | தாண்டிக்குடி | கந்திலி கரிகாலன் சி.மில்லர் மண்டேலா |
| 36 | | பண்ணைக்காடு பேரூர் | ஆலடிப்பட்டி கூட்டுறவு பண்டக சாலை அருகில் | கந்திலி கரிகாலன் சி.மில்லர் மண்டேலா |
| 37 | | ஆத்தூர் மேற்கு ஒன்றியம் | சித்தரேவு | வெள்ளைச்சாமி ரா.கனிமொழி |
| 38 | | அய்யம்பாளையம் பேரூர் | சின்ன அய்யம்பாளையம் நிலக்கோட்டை | வெள்ளைச்சாமி ரா.கனிமொழி |
| 39 | | சித்தையன்கோட்டை பேரூர் | கடை வீதி | வெள்ளைச்சாமி ரா.கனிமொழி |
| 40 | | ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றியம் | ரெட்டியார்சத்திரம் | பழனி குமணன் அ.தீன்ஷா நூஃப் |
| 41 | | திண்டுக்கல் வடக்கு ஒன்றியம் | மாலைப்பட்டி சாலை, பாலகிருஷ்ணாபுரம். | பழனி குமணன் அ.தீன்ஷா நூஃப் |
| 42 | | நிலக்கோட்டை வடக்கு ஒன்றியம் | சிலுக்குவார்பட்டி | நாமக்கல் ராஜகோபால் அ.சுஹாசினி |
| 43 | | வத்தலக்குண்டு தெற்கு ஒன்றியம் | குன்னுவராயன் கோட்டை | நாமக்கல் ராஜகோபால் அ.சுஹாசினி |
| 44 | | கொடைக்கானல் நகரம் | மூஞ்சிக்கல் | சேலம் சுஜாதா அ.செல்வக்குமார் |
| 45 | | | நாயுடுபுரம் | சேலம் சுஜாதா அ.செல்வக்குமார் |
| 46 | | தாடிக்கொம்பு பேரூர் | உண்டார்பட்டி | போடி காமராஜ் வா.ராஜேஸ்வரி |
| 47 | | அகரம் பேரூர் | விட்டல்நாயக்கன்பட்டி | போடி காமராஜ் வா.ராஜேஸ்வரி |

**திண்டுக்கல்**
நாள் : 30.07.2025



### 37 கோடி ரூபாய் மொத்த பரிசுத் தொகை கொண்ட 2025 ஆம் ஆண்டு

# முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளுக்கு இணையதளம் மூலமாக பதிவுகள்!

*சென்னை, ஆக. 1-*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டினை இந்தியாவின் விளையாட்டு தலைநகரமாக உருவாக்கி வருகின்றார்கள். 2025 ஆம் ஆண்டு முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் (Chief Minister's Trophy Games 2025) அனைத்து மாவட்ட மற்றும் மண்டல அளவில் வருகின்ற 22.8.2025 முதல் 12.9.2025 வரை நடத்தப்படவுள்ளன.*

*இவ்விளையாட்டுப் போட்டிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் 12 வயது முதல் 19 வயதிற்குட்பட்ட பள்ளி மாணவர்களுக்கும், 17 வயது முதல் 25 வயதிற்குட்பட்ட கல்லூரி மாணவர்களுக்கும், 15 வயது முதல் 35 வரையிலான பொதுப் பிரிவினருக்கும், அனைத்து வயது மாற்றுத்திறனாளிகளுக்கும், அரசு ஊழியர்களுக்கும் நடத்தப்படவுள்ளது.*

*மாவட்ட அளவில் 25 வகையான விளையாட்டுப் போட்டிகளும், மண்டல அளவில் 7 வகையான விளையாட்டுப் போட்டிகளும், மாநில அளவில் 37 வகையான விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.*

*தனி நபர் போட்டிகளில் மாநில அளவில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக 1.00 இலட்சம் ரூபாயும், இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாயும், மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும். குழுப் போட்டிகளில் மாநில அளவில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக தலா 75 ஆயிரம் ரூபாயும், இரண்டாம் பரிசாக தலா 50 ஆயிரம் ரூபாயும், மூன்றாம் பரிசாக தலா 25 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும். இப்போட்டிகளில் வழங்கப்படும் சான்றுகள் மூலம் சிறப்பு மதிப்பெண்கள் மற்றும் சலுகைகள் பெற இயலும்.*

*37 கோடி ரூபாய் மொத்த பரிசுத் தொகை கொண்ட 2025 ஆம் ஆண்டு முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளுக்கு இணைய தளம் மூலமாக பதிவுகள் நடைபெற்று வருகின்றன. முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் விளையாட்டு வீரர்கள் அனைவரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இணையதளமான https://cmtrophy.sdat.in / https://sdat.tn.gov.in வாயிலாக தனிநபர் மற்றும் குழு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள 17.7.2025 முதல் முன்பதிவு நடைபெற்று வருகிறது. முன்பதிவு செய்திட கடைசி நாள் 16.8.2025 மாலை 6.00 மணி ஆகும்.*

*விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தாங்களாகவோ, தங்கள் பள்ளி, கல்லூரி மூலமாகவோ முன்பதிவு செய்துகொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாவட்ட அலுவலகங்களை தொடர்பு கொள்ளலாம்.*

*ஆடுகளம் தகவல் தொடர்பு மையத்தை அனைத்து வேலை நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை 95140 00777 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.*

### தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி

## கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் நியமனம்!

## தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் பி.கே.ரவியை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளராக பணியாற்றி வரும் **திரு.கே.கலைவாணன்** அவர்கள் **கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக** நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுவார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 30-07-2025.

**முனைவர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர்
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

### கோவில்பட்டியில் – ரூ.7.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில்

# கடலைமிட்டாய் உற்பத்தி குறுங்குழும வசதி மையம்!

## அமைச்சர் பி.கீதாஜீவன் அடிக்கல் நாட்டினார்!

கோவில்பட்டி, ஆக. 1–

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், மூப்பன்பட்டி ஊராட்சியில் நேற்று முன்தினம் (30.07.2025) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பாக குறுங்குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.7.12 கோடி மதிப்பீட்டில் நவீன இயந்திரங்களுடன் கூடிய கடலைமிட்டாய் உற்பத்தி குறுங்குழும பொது வசதி மையம் கட்டுவதற்கு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் திருமதி பி.கீதாஜீவன் தெரிவித்ததாவது : –

புவிசார் குறியீடு பெற்று தரத்திலும், சுவையிலும் உலகப் புகழ் பெற்ற கோவில்பட்டி கடலை மிட்டாய் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதலையும், வளர்ந்து வரும் சந்தை வாய்ப்புகளுக்கேற்ப அவர்களது உற்பத்தி திறனை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டு ‘கோவில்பட்டி பகுதியில் கடலை மிட்டாய் உற்பத்தி குறுங்குழுமம் அமைக்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.



அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து நவீன இயந்திரங்களுடன் கூடிய மூலப்பொருட்களைத் தரம் பிரிக்கும் கூடம், கடலைமிட்டாய் உற்பத்தி மற்றும் பேக்கேஜிங் கூடம், உணவுப்பொருட்கள் பகுப்பாய்வுக் கூடம், ஆகியவற்றை அமைப்பதற்காக குறுங்குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தூத்துக்குடி மாவட்ட தொழில் மையம் மூலம் ரூ.713.22 இலட்சம் மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து அனுப்பப்பட்டு அரசின் ஒப்புதல் பெறப்பட்டது.

மொத்த திட்ட மதிப்பீட்டில் 90% தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு மீதமுள்ள 10% கடலைமிட்டாய் உற்பத்தியாளர்கள் சங்கத்தால் முதலீடு செய்யப்பட்டது. இந்த பொது வசதி மையம் அமைவதால் கோவில்பட்டி கடலைமிட்டாய் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சுமார் 100 குறு மற்றும் சிறு உற்பத்தியாளர்கள் பயன் பெறுவர்.

600 நபர்களுக்கு வேலை வாய்ப்பும், ஆண்டிற்கு 60 கோடி வருவாயும் ஈட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. கோவில்பட்டி கடலைமிட்டாயின் நேரடி ஏற்றுமதி வருவாயும் தற்போதைய அளவிலிருந்து 5 மடங்கு அதிகரிக்கும் என சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதாஜீவன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இரவிச்சந்திரன், கோவில்பட்டி நகரமன்றத் தலைவர் கருணாநிதி, தூத்துக்குடி மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் திருமதி.அ.ஸ்வர்ணலதா, தொழில் நிறுவன உரிமையாளர்கள், பொதுமக்கள் மற்றும் அரசு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.